# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 08 | நாடகமும் அரங்கியலும் | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி-I

❖ **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. ஒத்திகை அனைத்தும் நிறைவுபெற்ற பின்னர் பார்ப்போர் முன்னிலையில் அளிக்கை செய்யப்படுவது..
   1. ஆற்றுகை 2. செயலியக்க ஒத்திகை
   3. இறுதி ஒத்திகை 4. நாடக ஒத்திகை
2. ஆற்றுகை முடிவில் ஆற்றுகையுடன் தொடர்புடைய அனைவரும் பங்குபற்றி ஆற்றுகையின் சாதக, பாதக விடயங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது.
   1. பாராட்டுதல் 2. பிழைகளைக் கண்டு பிடித்தல்
   3. திருத்தம் செய்தல் 4. ஆற்றுகை மதிப்பீடு
3. ஊமச் சித்திரிப்பில் பயன்படாதது,
   1. உணர்ச்சி வழிச் சித்திரிப்பு 2. குரல் வழிச் சித்திரிப்பு
   3. உடல் வழிச் சித்திரிப்பு 4. காண்பிய வழிச் சித்திரிப்பு
4. கோடை, புதியதொரு வீடு ஆகிய பா நாடகங்களை (கவிதை நாடகங்கள்) எழுதியவர்,
   1. கலாநிதி.குழந்தை.ம.சண்முகலிங்கம் 2. மகாஹவி உருத்திரமூர்த்தி
   3. கலாநிதி.க.சிதம்பரநாதன் 4. வி.கந்தவனம்
5. தமிழர்களின் பாரம்பரிய அரங்க வடிவம்,
   1. இசைநாடகம் 2. கிராமிய நடனம்
   3. நாடகம் 4. கூத்து
6. மழையை மட்டும் நம்பி வாழும் யாழ்ப்பாண விவசாயிகள் எதிர்கொள்ளும் சிக்கல்களை வெளிப்படுத்தும் கவிதை,
   1. தேரும் திங்களும் 2. கூடிவிளையாடு பாப்பா
   3. மீண்டும் தொடங்கும் மிடுக்கு 4. ஒன்றாக கைகோர்ப்போம்
7. பின்வருவனவற்றுள் துணைக்கலை அல்லாதது,
   1. எழுத்துரு 2. வேடஉடை
   3. ஒப்பனை 4. ஒளி விதானிப்பு
8. இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு பாத்திரங்கள் தமக்கிடையே உரையாடி மோதுகையை வெளிப்படுத்தும் பாடற் பகுதிகளை குறிப்பிடும் சொல்,
   1. முரண் பாட்டு 2. வரவுப் பாட்டு
   3. தர்க்கத் தருக்கள் 4. கூத்துப் பாடல்



kalvi.lk

9. நாடக ஒத்திகையினை மேற்கொள்பவர்,

1. நெறியாளர்
2. தயாரிப்பாளர்
3. நடிகர்
4. மேடை முகாமையாளர்

10. ஊமச் சித்திரிப்பில் பயிற்சி பெறுவதற்கு உதவும் அரங்க விளையாட்டு அல்லாதது,

1. குருட்டு ஆட்டோ
2. கரடியும் கிராம மக்களும்
3. தலைவரைக் கண்டுபிடித்தல்
4. பஸ்

11. சிறுவர் அரங்கிற்கான எண்ணக்கருவைச் சிறப்பாகக் கொண்ட நாடகமாகக் கருதப்படுவது.

1. ஒற்றுமையின் சின்னம்
2. பஞ்சவர்ணநரியார்
3. கண்டறியாத கதை
4. கூடிவிளையாடு பாப்பா

12. நாடகம் நிகழ்த்த மிக அவசியம் அல்லாதது,

1. நடிகன்
2. பார்வையாளர்
3. அரங்கு
4. இசை

13. நாடகக் கதையோட்டம் வளர்த்துச் செல்லப்படுவது,

1. நாடகக்கரு மூலம்
2. நாடகச் சொல்லாடல்கள் மூலம்
3. இசை மூலம்
4. நடனத்தின் மூலம்

14. க.பொ.த உயர்தர வகுப்பில் நாடகமும் அரங்கியலும் பாடம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு,

1. 1979
2. 1989
3. 1972
4. 2000

15. உலக நாடக தினம் கொண்டாடப்படுவது,

1. பங்குனி 27
2. வைகாசி 01
3. மார்கழி 22
4. தை 17



A



B



C



D



E

❖ **மேற்குறிப்பிட்ட படங்களினை அடிப்படையாகக் கொண்டு 16 - 20 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

16. காவு தடியுடன் தொடர்புடைய கிராமிய கலை வடிவம்

1.D    2. B    3.E    4. A

17. நாடக அரங்க கல்லூரியை உருவாக்கியவர்

1.D    2. B    3.E    4. A

18. “ஐயா எலக்சன் கேட்கிறார்” என்ற நாடகத்தின் ஆசிரியர்

1.A    2. E    3.B    4. C

19. சடங்காகவும் தொழில் முறையாகவும் ஆடப்படும் ஆடல் வடிவம்

1.D 2. B 3.E 4. A

20. கூடி விளையாடு பாப்பா என்ற சிறுவர் நாடகத்தை நெறியாள்கை செய்தவர்

1.A 2. E 3.B 4. C

(20×2 =40புள்ளிகள் )

## பகுதி- II

❖ **விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக..**

**1.** **1.** சித்திரிப்பு என்றால் என்ன?

**2.** நால்வகைச் சித்திரிப்புக்களையும் தருக.

**3.** நால்வகைச் சித்திரிப்புக்களையும் தனித்தனியாக உதாரணங்களுடன் விளக்கிக் கூறுக.

(2+4+6= 12 புள்ளிகள்)

**2.** **1.** அரங்க ஒளியூட்டல் தேவைக்காக நீர் கற்ற மின்சுற்று இணைப்பின் இரு வகைகளையும் தருக?

**2.** அடிப்படை மின்சுற்றை அமைக்கத் தேவையான பொருட்கள் 4 தருக.

**3.** அரங்க ஒளியூட்டல் (ஒளி விதானிப்பு) ஆற்றுகைக்கு எவ்வாறு துணைபுரிகின்றது. நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

(2+4+6=12 புள்ளிகள்)

**3.** **1.** நாடக ஒத்திகை என்றால் என்ன?

**2.** உமக்குத் தெரிந்த ஒத்திகை வகைகள் 4 தருக?

**3.** நாடக செயலியக்க ஒத்திகை ஆற்றுகைக்கு ஏன் அவசியம் என மூன்று விடயங்களைக் குறிப்பிடுக?

(2+4+6=12 புள்ளிகள்)

**4.** **1.** துணைக்கலைகள் என்றால் என்ன?

**2.** நாடகத்தில் பயன்படுத்தப்படும் துணைக்கலைகள் நான்கினைத் தருக.

**3.** ஆற்றுகையின் போது துணைக் கலைகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பயன்கள் மூன்று தருக.

(2+4+6=12 புள்ளிகள்)

**5.** **1.** அரசனின் புத்தாடை என்ற நாடகத்தின் கரு யாது?

**2.** அரசனின் புத்தாடை என்ற நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்களைக் குறிப்பிடுக.

**3.** அரசனின் புத்தாடை என்ற நாடகத்தில் இடம்பெறும் பாத் திரங்களில் உம்மைக் கவர்ந்த மூன்று பாத்திரங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் பாத்திரப் பண்புகளைத் தருக.

(2+4+6=12 புள்ளிகள்)

3. **விரும்பிய மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.**

1. காவடியாட்டம்
2. கரகாட்டம்
3. ஊமச்சித்திரிப்பு
4. மகாஹவி உருத்திரமூர்த்தியின் கவிதைகள்

(3 ×4=12 புள்ளிகள் )



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page